முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 08.01.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 08.01.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தங்கராஜி | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | பாண்டியன் | கிராமம்.. | கல்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2,3,7,8 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. 2,7,8, பிரதிவாதிகள் தந்தை பெயர் சேப்பெருமாள். 4 ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ராமசாமி, அந்த ராமசாமி தான் இந்த வழக்கில் 5 ம் பிரதிவாதி என்றால் சரிதான். சேப்பெருமாள், ராமசாமி, 1 ம் வாதியின் கணவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் பங்காலி முறை என்றால் சரிதான். இவ்வழக்கில் 4 இன சொத்து மேற்புரம் 15 செண்ட் பாலகிருஷ்ணனுக்கு உரிமையான சொத்து என்றால் சரிதான். 02.08.1978-ல் பாலகிருஷ்ணனும் அவரது மனைவி 1 ம் வாதியும் 4 ம் பிரதிவாதி அன்பழகனுக்கு பதிவு செய்யப்பட்ட கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் இல்லை, ஜெயலட்சுமி என்னிடம் அவ்வாறு எந்த ஒரு கிரயமும் ஏற்படவில்லை என்று சொன்னார்.

2. 02.08.1978 கிரயத்தை பற்றி பாலகிருஷ்ணனிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் தற்போதும் வீட்டில் தான் இருக்கிறார். 02.08.1978 ல் பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சுமியும் 4 ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றாலும் அதனை ஒப்புக்கொண்டால் என் வழக்கிற்கு பாதகம் ஆகிவிடும் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு 14.08.1979 ல் 4 ம் பிரதிவாதி அன்பழகன்ம், 7 ம் பிரதிவாதி வீரமுத்துவும் ஒரு பரிவர்த்தனை பத்திரம் எழுதிக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த பரிவர்த்தனை படி 4 ம் இன வழக்கு சொத்தில் 15 செண்ட் வீரமுத்து விற்கு கொடுக்கப்பட்டது என்றால் இல்லை.

3. 5ம் இன சொத்து 68 செண்ட் பொறுத்து வழக்கில் சொல்லியுள்ள செட்டில்மெண்ட்டிற்கு முன்பாக 19.03.1976ல் பாலகிருஷ்ணன் 7ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை, அவ்வாறு கிரயம் எதுவும் கொடுக்கவில்லை. 4,5ம் இன சொத்து பொறுத்து வீரமுத்து பெயரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் பட்டா தவறுதலாக அவர் பெயரில் மாற்றப்பட்டுவிட்டது. தவறான பட்டா வை திருத்த எதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். 6வது இன சொத்து 20/3A 68 செண்டில் 35 செண்ட் சொத்து பொறுத்து பாலகிருஷ்ணம் 4ம் பிரதிவாதி அன்பழகனுக்கு 02.08.1978ல் கிரயம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது தவறான பத்திரம்.

4. 6வது இன சொத்து 20/3A 68 செண்டில் 35 செண்ட் போக மீதி உள்ள நிலம் 4ம் பிரதிவாதி அன்பழகனுக்கு பாத்தியம் ஆன சொத்து என்றால் எனக்கு தெரியாது. அன்பழகன் 17.08.1979 -ல் பூரா 68 செண்டையும் 8ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு கிரயம் கொடுத்து விட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலத்திற்கான பட்டா கிருஷ்ணமூர்த்தி பெயரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 7,8 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள மேற்கூரிய கிரய விவரங்களை தெரிந்துக்கொள்ள நகல் வாங்கிப் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

5. 14.07.1976ல் ஜெகதாம்பாள் எழுதி வைத்ததாக சொல்லப்படும செட்டில்மெண்ட் பத்திரம் உண்மையானது அல்ல என்றாலும் அவ்வாறு எழுதிக்கொடுக்க ஜெயதாம்பாளுக்கு உரிமையல்ல என்றாலும் அதன் படி சொத்து

சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றாலும், அந்த பத்திரம் எந்த காலத்திலும் அமலுக்கு வரவில்லை என்றாலும், 1976 மற்றும் 1978 வழக்கு சொத்து 1,4,5,6 இன சொத்துக்கள் பாலகிருஷ்ணன் மற்றும் ஜெயலட்சுமியால் கிரயம் கொடுக்கப்பட்டது என்றாலும் அதனை 7,8 பிரதிவாதிகள் அடைந்து அவர்கள் சுவாதீனத்தில் கடந்த 44 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றாலும் அவர்கள் பெயர்களிளேயே பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. தவறான செல்லதகாத ஆவணத்தின் அடிப்படையயில் பணம் பறிப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram